உ

இல்லறமா? துறவறமா?

S. நாராயணசாமி ஐயரவர்கள்

1917

உ

இல்லறமா, துறவறமா?

இஃது

சுவாமி விவேகாநந்தரால்

ஆங்கிலத்தில் பிரசங்கஞ் செய்த…

கும்பகோணம் காலேஜ் ப்ரொபஸர்,

S. நாராயணசாமி ஐயரவர்கள் B. A.

இங்கிலிஷினின்றும் தமிழில்

மொழிபெயர்த்தெழுதியது.

மதுகரவேணி புஸ்தகசாலையாரால்,

பிரஸித்தஞ் செய்யப்பட்டது.

1917

இதன் விலை அணா 1.

M. V. PRESS, VEPERY.

தமிழ் சர்க்கார் சட்டங்கள்.

		ரூ.	அ.	ப
புது விவகார [illegible]	... ...	2	4	0
புது பெரிய [illegible]	... ...	1	[illegible]	0
கிரவினி பூலா[illegible]	... ...	1	8	0
சிவில்லா [illegible]	... ...	3	0	0
[illegible]ப்பு	... ...	2	8	0
[illegible] சட்டம் வியாக்கியானத் [illegible]	... ...	0	8	0
[illegible] டெக்ஸ்ட்	... ...	1	4	0
[illegible] முன்சிப் சட்டம்	... ...	1	4	0
[illegible]ர்ணயச்சட்டம்	... ...	0	8	[illegible]
[illegible] ஆக்கிரமிப்பு (என்குரோசமெண்டு) சட்டம்		0	4	[illegible]
[illegible]மச்சுகாதாரம்	... ...	0	2	[illegible]
[illegible]ம்பாக்ட்	... ...	0	1[illegible]	
[illegible]ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	... ...	0	8	
கிரிமினல் லா	... ...	2	8	
மகம்மதியன் லா ...	... ...	2	4	0
ஜமீன் குடிகிலச்சட்டம்	... ...	1	4	[illegible]
பினல்கோட் சட்டம்	... ...	2	8	0
டிரான்சுபர் ஆப் பிராபர்டி ஆக்ட்	...	0	12	0
அப்காரி ஆக்ட ...	... ...	0	8	[illegible]
டிரஸ்டி ஆக்ட் ...	... ...	0	8	[illegible]
பரம்பரை கிராம உத்தியோக சட்டம்	...	0	8	[illegible]
முன்சீப்புககு வேண்டிய க்ரிமினல்ரிஜிஸ்டர்	1-க்கு	0	6	[illegible]
சிவில் ரிஜிஸ்டர் ...	1-க்கு	0	6	
கியாலண்டர் (பாரம்) ...	50-க்கு	0	7	
சிவில் 1-வது பிரதிவாதி சம்மன்	100-க்கு	0	6	
ஷை 2-வது சம்மன் ...	100-க்[illegible]			
சிவில் சாட்சி சம்மன் ...	100-க்[illegible]			

உ

இல்லறமா, துறவறமா?

முன்னொருகாலத்தில் பாண்டியநாட்டு அரசனாக 'ஸத்தியப்பிரியன்' என்று ஒருவனிருந்தான். அவன், தனக்கென்று ஒன்றும் வேண்டாதவனாய் ஜனங்களின் க்ஷேமத்திற்கே எல்லா முடையனாய் மனுநீதிவழுவாமல் அரசியற்றிவந்தான். அரசர்க்கு ஏற்பட்டிருக்கும் கடமையைக் கடைப்பிடித்து ஒழுகுபவனாயினும், நீரிலேபிறந்து நீரிலேவளர்ந்தும் தன்னிடத்து ஈரம்பற்றாதிருக்கும் தாமரையிலைபோல, எப்பொழுதும் வேலையிடத்துக்கையும் கடவுளிடத்து மனமுமாக இருந்துவந்தான். உண்மைப்பொருளையறிவிப்பதற்குத்தக்க பரமகுருவை எப்பொழுது நான் அடையப்பெறுவேனோவென்று மனக்கவலையுற்றிருக்கும் இந்த அரசனிடத்தில் 'ஹிதோபதேசி' என்ற பெயரையுடைய ஒருபெரியவர்வந்தனர்.

அவரை எதிர்கொண்டழைத்து அடிபணிந்து அர்க்கியம் பாத்தியம் ஆசமநீயம் முதலியவற்றால் முறைப்படி உபசரித்து ஓர் ஆசனத்து இருக்கச்செய்து அவரைநோக்கி "தேவரீர் வரவுநல்வரவாகுக, என்குலத்தோர்செய்துள்ள புண்ணியத்தினாலன்றோ இப்பொழுது தேவரீர் இங்கே எழுந்தருளப்பெற்றேன். இனி என் மனச்சஞ்சலம் நீங்கினேன்" என்று அரசன்கூற, அதற்கு அப்பெரியோர் "உமக்குள்ள மனச்சஞ்சலம்யாது?" என்றுகேட்க, அரசன் சொல்வானாயினான்: 'பலபேர்சொல்லும் பலவார்த்தைகளால் இன்னது தகு

தியாணதென்று தெரியாமல் மனந்தடுமாறிச் சஞ்சலப்படுகிறேன்; நற்கதியடைவதற்குத் தக்கவழி கலியாணஞ்செய்துகொண்டு இல்லறவாழ்க்கையிலிருப்பதா, அல்லது, எல்லாவற்றையுந்துறந்து சந்நியாசியாக இருப்பதா, இன்னது ஏற்றவழியென்று அறியாமல் பல அபிப்பிராயங்களைக் கேட்டு நான் மயங்குகிறேன்; என்னைத் தெளிவுறச்செய்யவேண்டும்" என்றான். இதுகேட்ட ஹிதோபதேசி "நீர் சொன்ன இரண்டும் நற்கதிக்கு வழிகள்தாம். அதற்கு உரியபடியே நடந்தால் இல்லறமும் வழியே, துறவறமும் வழியே" என்றனர். அதற்கு அரசன் "ஒவ்வொன்றும் வழியாவது எப்படியோ நன்கு விளங்கவில்லையே. என்மனத்திற் பதியும்படி அவற்றை விளக்கிக் காட்டவேண்டுகிறேன்" என்றான். இவ்விஷயத்தில் பலநாளாக ஐயமுற்றுவருந்தும் அரசனைநோக்கி "ஓ! சத்தியப்பிரியரே, நீர் என்னுடன் வருவீராயின், நான் சொல்லியவற்றின் உண்மையை உமக்கு நேரிற்காட்டுவேன்; அப்பொழுது நீர் சந்தேகந்தெளிவீர்" என்று பெரியவர்கூற, அதற்கு அரசன் உடன்பட்டு இராச்சியபாரத்தைத்தக்க மந்திரிகளிடம் ஒப்பித்து ஹிதொபதேசியுடன் புறப்பட்டுப்போனான்.

அவ்விருவரும் வழியில் ஒரு நகரத்தையடைந்து அங்கு ஊரரெல்லாரும் உற்சாக கோலாஹலத்தோடிருப்பதைக் கண்டு, அன்று அவ்வூரரசன்மகளுக்குச் சுயம்வரம் நிச்சயித்திருப்பதாகக் கேள்வியுற்று அந்தக்காட்சியைக் கண்டுபோகலாமென்று அங்கே தங்கினர். முன்னே இரண்டொருமுறை ஏற்படுத்திய சுயம்வரத்தில் இராஜகன்னிகை தன் மனதுக்கிசைந்த கணவனைக் காணாமையால் சுயம்வரம் நிறைவேறாமற் போயிற்று. இம்முறை எவ்விதத்தாலும் காரியம் பயன்படவேண்டுமென்ற மனக்கவலையுடையனாய்க் கன்னிகையின் தந்தையாகிய அவ்வூரரசன் இந்தச் சுயம்வரத்தைப்பலவிதத்தி

லும் சிறப்பித்து நடத்த ஏற்பாடுசெய்தான். பலதேசங்களி லிருந்து அரசர்களும் பிரபுக்களும் வந்திருந்தார்கள். இக் காட்சி அடிக்கடி நிகழக்கூடியதன்றாகையால் இதைக் காண்ப தற்குக் கணக்கில்லாத ஜனங்களும் வந்துகூடினர். ஸத்தியப் பிரியனும் ஹிதோபதேசியும் இவ்விநோதத்தைக்காண, தக்க சமயத்தில் சுயம்வரமண்டபம் வந்து சேர்ந்தார்கள்.

வழக்கம்போல, இராஜகன்னிகைக்கு அவளுடைய தோ ழியானவள் மதிப்புடைய ஒவ்வொருவரையும்பற்றி விவரஞ் சொல்லிக்கொண்டுவருகையில் "ஓ! மாதரசே, உன்னுடைய ரூபலாவண்ணியத்தைக்கேட்டு அநேகர் நெடுந்தூரம் கடும்பய ணஞ்செய்துவந்து உன்னைக்கண்ணுற்று, அழகிற்கு ஓரணிக லம்போன்ற இவளையன்றோ மணம் புரியவேண்டுமென்று உன் மேற் காதல்பூண்டு நிற்கிறார்கள். வேறு சிலர், உன்னுடைய மிகுந்த செல்வத்தைக்கண்டு, இச்செல்வச்சீமாட்டியைக் கலி யாணஞ் செய்துகொண்டால் நாம் அடையப்பெறாதது முண் டோவென்று எண்ணி எண்ணி உன்மேல் ஆசைகூர்ந்து அல மருகிறார்கள்" என்றுகூற, "தோழி, என்னழகுக்காக என் னைக்கலியாணஞ்செய்பவனை நான் வேண்டேன். என்னழகு என்னிடத்து நீடித்திருப்பதன்றே. அழகுக்காக ஒன்றை இச்சிப்பவன் என்னழகிலும் எத்தனையோமடங்கு அதிகமான அழகை நெடுங்காலம் குறைவின்றியுடைய சந்திரசூரியமண் டலங்களைக்கண்டு களிகூரலாமே. செல்வத்தைக்கண்டு என் மேல் அன்புபாராட்டுவோன் தெய்வத்தன்மையதாய அன் பினை வாணிபப்பண்டமாக்குவோனல்லனோ, நீர்க்குள் பாசி போல் வேர்க்கொள்ளாத நிலையற்ற அன்பினை யுடையோனெ ன்பதற்கு ஐயமுமுண்டோ? செல்வத்தின் பொருட்டு ஒன்றை யிச்சிப்பவனுக்கு மாணிக்கம்நிறைந்த சமுத்திரமன்றோ அவ் விச்சைக்கு ஏற்றபொருள்" என்று இவ்வாறுசொல்லிக்கொ

ண்டு ஒருவரொருவராகக் கடந்து சென்றபின், பேரறிவும் மனத்தூய்மையும் பிரகாசித்து விளங்காநின்ற தன் இனிய முகத்தின் மலர்ச்சியாலும், ஐம்பொறிகளையடக்கி ஆண்டுவரு வதன்பயனாகவுள்ள காலனையுங் கடிவதுபோன்ற கட்டுக்குலை யாத தம் த்ருடதேகத்தின் காந்தியாலும், ஒளிவீசிக்கொண்டு நிற்கும் ஒரு சந்நியாசியின் முன்வந்து அவர்கழுத்தில் இராச கன்னிகை மாலையிட யத்தனித்தாள்.

அப்பொழுது அச்சந்நியாசி "ஓ! ஓ! இஃதென்ன விந் தை சந்நியாசிகழுத்தில் இராசகன்னிகை மாலையிடுதல் இது வரையில் யாருமறியாதபுதுமை. நான் பிச்சையெடுத்துண்ப வன், பிச்சையெடுக்குங்காலமொழிய மற்றைக்காலங்களில் கிராமத்துக்குள் புகாதவன், தரையே பாயாகக் கையே தலை யணையாகவைத்து உறங்குபவன், ஓரிடத்தும் அதிகநாள் தங்கியிராமல் ஊரூராகத்திரிபவன். இராசகன்னிகையோ செ ல்வத்திலே பிறந்துவளர்ந்தவள். செல்வத்தால் கிடைக்கக் கூடிய சகல சுகத்தையும் அனுபவித்து வருபவள். செல்வமு டையார்க்கு இவ்வுலகத்தில் கிடைக்காததுமுண்டோ? ஒன்று மில்லாத வெறுங்கையனாகிய என்னைக் கலியாணஞ்செய்து கொண்டால் இக்கன்னிகையை அவளுக்குத்தக்க நிலையில் வைத்தல் என்னாற்கூடியதோ? இஃது ஒருவிதத்திலும் ஒவ் வாதகாரியம். இக்கன்னிகைக்கு நான் அருகனல்லன்" என் றார். இதைக்கேட்ட அபசனாகிய கன்னிகையின் தந்தை "ஓ! சுவாமி, எனது புத்திரியை விவாகஞ்செய்துகொண்டால் அவளைத் தக்க நிலையில்வைத்து வாழ்வதற்கு வேண்டிய செ ல்வமில்லையேயென்ற கவலை தங்களுக்கு வேண்டுவதில்லை, எனக்கு இவளன்றி வேறொரு குழந்தையுமில்லை. இவளுடைய கன்னிகாதானத்தோடு என்னுடைய பாதி இராச்சியத்தை யும் பாதிச்செல்வத்தையுங்கொடுப்பேன். எனக்குப் பிற்கா

லம், முழுவதையுமடையலாம். ஆகையால், பணக்கவலை சிறிதுமின்றி இவளுடைய கலியாணத்திற்கு இணங்கலாம்" என்றான். அதற்குச் சந்நியாசி, "ராஜாவே! செல்வமில்லாத குறை ஒன்றுதான் என்னுடைய விவாகத்திற்குத் தடையென்று எண்ணினீர். என் நிலையை நீர் முற்றுமுணர்ந்து பேசவில்லை. நான் இவ்வுலகத்தைத் துறந்தவன், ஆத்மஞானுபவிருத்தியிலேயே உழைத்துக்கொண்டிருப்பவன். அதற்கு இச்சரீரம் சாதகமாக இருத்தலால் மாத்திரமே இதைப்பற்றிக் கருதுபவன். ஆதலால் நான் கலியாணத்திற்கு அருகனல்லன். மேலும், சந்நியாசியாய்ப்போக நோக்கமுடையவனுக்குப் பெண்ணைக்கொடுக்கலாகாது என்ற தருமசாஸ்திரம் நீர் அறியாததோ? அவ்வாறிருக்கச் சந்நியாசியாகவே யிருப்பவனுக்குப் பெண்ணைக்கொடுக்க யத்தனிப்பது தகப்பன் பெண்ணுக்குச்செய்யும் கடைமையிலொன்றாகுமோ?" என்றுசொல்லியதற்கு அரசன் மறுமொழிசொல்லாமல் சற்று நின்றதைக்கண்டு, இராசகன்னிகை "என்பிதாவே! என்மேலுள்ள அன்பின் மிகுதியால் எனக்குச் சுயம்வரம் நிச்சயித்தீர்; அதன்படி என்மனத்துக்கு இயைந்தவரை நான் வரித்தேன். என் இன்னுயிர்க்கு உற்றதுணை இவரென என்மனம் கண்டுகொண்டது. அது வேறிடத்துச்செல்லாதாகையால், எனக்குக் கணவன் இவரே. இனி இவரைவிட்டு நீங்காமலிருப்பதே எனது கற்பு. இக்கற்புக்குக் குறைவுவாராமல் என்னைக் காக்க உமக்குக் கடனில்லையோ" என்று தன்தந்தையின் முகத்தைநோக்கி மிகவும் பரிதபித்துக்கூறச் சந்நியாசி, கன்னிகையின் மனஉறுதியையும் அவளுடைய உருக்கமானவார்த்தையால் தந்தையாகிய அரசன் மனமிளகி நிற்றலையுங்கண்டு, இனி இங்கே நிற்பது உசிதமன்றென்று அவ்விடம்விட்டு ஓடத்தொடங்கினர். கன்னிகையும் உடன்புறப்பட்டாள்.சூரிய

பொழுது அவளுடைய உற்றோர் பெற்றோர் யாவரும் இவ்வாறு சந்நியாசியின்பின் போவது தகுதியன்றென்று அவளுக்குப் பலவிதத்திற்சொல்லவும், அவள் "கணவன்பின் மனைவிபோவது யோக்கியமன்றென்று நீங்கள் எவ்வாறு எண்ணுகிறீர்களோ எனக்கு விளங்கவில்லை. கனவனன்றி மனைவிக்கு வேறுபுகலிடம்யாது? என்மனம் அவர்வழிச்சென்று அவரைக் கணவனாக ஆக்கிக்கொள்ளவில்லையோ? கணவனோடிருந்து அவருடைய நற்காரியங்களுக்குத் துணையாக இருப்பதிலும் கற்புடைய மனைவிக்கு நன்மை வேறுளதோ? என்வாழ்நாளை அவருடைய பணிவிடையிற்கழிப்பது கடனேயன்றி வேறிடத்திருக்தலும் வேறுவகை நினைத்தலும் எனக்குக் கற்பாகா, என்று சொல்லிச் சந்நியாசியைவிடாது தொடர்ந்து செல்வாளாயினள். இவற்றையெல்லாம் பார்த்து நின்ற ஹிதோபதேசி, சத்தியப்பிரியனைநோக்கி "ஓ! ராஜாவே, இதன் முடிவைக்காண்போம். நாமும் அவ்விருவர்பின் தூரத்தேபோவோம்வாரும்" என்று சொல்லத்தொடங்க, அரசனும் அவரைத் தொடர்ந்தான்.

முன்னேசென்ற சந்நியாசி "ஊரைக்கடந்து இச்சிறுகாட்டுக்கருகில் வந்துவிட்டேன். மநுஷ்யசஞ்சாரமில்லாத வளைந்து வளைந்து செல்லுகின்ற தனிவழியிது. இனிக்கன்னிகையின் பயமுமில்லை. கலியாணபயமுமில்லை" என்று எண்ணி வழியில் ஓரிடத்துக் களைப்பாறநின்றார். அப்பொழுது இராஜகன்னிகை அவருக்கு அருகிலே வழியிலுள்ள வளைவின்முனையிலேவந்து அவருக்கு எதிர்ப்பட்டாள்; வழியின் வளைவினலாகிய மறைவினால் அவள் தமதருகில் வருமளவும் அவள் வருவதைப் பாராமலிருந்த அவர், அவளை அருகிற்கண்டவுடனே திடுக்கிட்டு உடனே தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, யும் —க் கடிந்துபேசி இவ்விடம்விட்டுத் தூரத்துவேனென்று

நிச்சயித்து "ஓ! கன்னிகையே, இஃது உனக்கு அழகாமோ? இப்படித் தனிவழியே ஒரு துணையுமின்றி ஒருபெண் வரலாமோ? உலகம் உன்னைப்பழியாதோ? நான் விவாகத்திற்சற்றும் விருப்பமில்லாதவ னென்பதன்றி உலகப்பற்றைத் துறந்தவர்க்குரிய ஆசிரமத்தை அநுஷ்டித்து வருபவனென்றும் நீ அறியாயோ? நீ இவ்விடத்தில் என்னருகில் நிற்பதால் உனக்கும் நீ பிறந்த குலத்திற்கும் எனக்கும் தீராப்பழியைத் தேடுகிறாய். இது குலமாதர்க்கு அடாது. ஆகையால் நீ விரைவில் வந்தவழியேசென்று உன் தகப்பனிடம்போய்ச்சேர்" என்று தம்முடைய அப்பிரியம்நன்கு தோன்றும்படி கடிந்துசொல்லக் கன்னிகை, "ஓ! என் இன்னுயிர்நாதனே! என்மனத்தால் உம்மைநான் கணவனாக அடைந்துவிட்டேன்! இதற்கு அந்தர்யாமியாகிய சர்வேசுவரன்சாட்சி; இனி உம்மைவிட்டு நான் போவது எப்படி? உமது அடியாளாக இருந்து எனதுகற்பினைக் காப்பதேயன்றி எனக்கு வேறுகதியேது? நீரே எனக்கு உலகமனைத்துமாக இருக்கும்பொழுது உமது முன்னிலையில் என்னைத் துணையற்றவள் என்னலாமோ? கற்புடைமைக்காக ஒருத்தியை உலகம் பழித்ததுமுண்டோ? அதனால் அவளைப்பெற்றகுலம் ஈடேறுமென்று நான் கேட்டுள்ளதும் பொய்யோ? முறைகடவாத மனைவியால் கணவன்பழியுறுவதும் எங்ஙனம்? துறவிகளின் பணிவிடைக்கு உயர்குலமாதர்களை ஏவுவது பண்டேயுள்ள முறையன்றோ? அப்பணிவிடையால் அம்மாதர்கள் தம்நற்கதிக்கு உரிய அநுக்கிரகம் பெறுவது நெடுநாளாகவுள்ள வழக்கமென்று நான் கேட்டுள்ளேன். அந்நிலையில் உமக்குவேண்டிய பணிவிடைசெய்து என்வாழ்நாளைக்கழிப்பேன். அன்றியும் உம்மைவிட்டுப்பிரிய நியாயமொன்றும் காணேன்" என்று உறுதிப்பாடுடையவளாய்க் கூற, சந்நியாசி, இனி இவளோடு வார்த்தையாடுவதிற் காரிய

மில்லை யென்றெண்ணி "பெண்ணே! நீ நிரம்பச் சாதுரியமாகப் பேசுகிறாய். உனக்குத் தோற்றியதைச்செய். இனிமேல் என்னை நீ காணமாட்டாய்" என்று அங்குமிங்கும் சற்று ஓடித்தனக்கு மிக்க பழக்கமுள்ள மரமடர்ந்த காட்டினுள்ளே புகுந்துவிட்டார். அப்பொழுது கையெழுத்துமறைந்த சமயமாகையால் அவருடன் தொடர்ந்து செல்லமுடியாமல் வழியிலேயே நின்றுகொண்டு "நான் என்னசெய்வேன்! கண்ணில்லான் அதைப்பெற்று இழந்தானென ஆனேன். என் பணிவிடையையும் ஏற்றுக்கொள்ளுவதில்லையென்று சென்றாரே! அவர் எண்ணம் யாதோ? ஐம்பொறிகளையும் அடக்கி அவற்றைத் தம்வசமாக்கிக் கொண்டவருடைய வன்மனமும் சற்றுச்சோற்வுறுங் காலத்தில் அதிபராக்கிரமமுடைய பொறிகளால் இழுக்கப்பட்டு உலகவிஷயங்களிற் கலத்தல் கூடுமென்ற ஆன்றோர்மொழியை எண்ணி அவர் என் பணிவிடையையும் ஏற்காமற்போனார்போலும். இனிநான் செய்யக்கூடியது ஒன்றேதான். இவர் என்மனத்தினின்றும் நீங்கார்; இவரைப்போல ஒருருவமமைத்து இவர்க்குரிய பணிவிடையை அதற்குச்செய்து எனதுவாழ்நாளைப் போக்குவேனென்று மனவுறுதி செய்துகொண்டு அவரை நினைந்து நினைந்து கண்ணீர்ததும்ப நிற்கும் இராசகன்னிகையின் அருகில், பின்னை போந்த சத்தியப் பிரியனும் ஹிதோபதேசியும் வந்து சேர்ந்தனர். கண்கலங்கி நிற்கும் கன்னிகையைக் கண்ணுற்று அவளுக்கு உற்ற சங்கடம் யாதென்று அவர்கள் வினவ அவள் "நான் என்னுடைய சுயம் வரத்தில் கணவனாகவரித்த சந்நியாசியைத் தொடர்ந்து இவ்விடம் வந்தேன். நான் பலவிதத்தில் வருந்திப் பிரார்த்தித்தும், அவர், விவாகம் தமக்குப் பொருத்தமில்லாத காரியமென்றும், பெண்கள் முகத்தையே எதிட்டுப்பார்த்தல் கூடாதென்றும், 'இனி நீ என்னைப்பார்க்க

வல்லையல்லை' என்றுஞ்சொல்லி என்னை இவ்விடத்தில் தனியே விட்டுவிட்டு இவ்வடர்ந்த காட்டினுள் புகுந்துவிட்டார், இங்கே வழியொன்று மறியேன். என்தந்தையிடத்து என்னைச்சேர்ப் பீராயின், பேருபகாரஞ் செய்தவராவீர். இந்நன்றி என்றும் மறவேன்" என்றுகூற, அவர்கள், "நாங்களும் இவ்விடத்திற் குப் புதிதாகவந்தவர்கள்; இங்கே ஒன்றையும் அறியோம். இருட்டிப்போய் விட்டதால் இராத்திரி இங்கே ஓரிடத்தில் தங்கியிருப்போம். விடியற்காலையில் உன்னை உன்பிதாவிடத் தில் ஒப்பித்துப்போகிறோம்" என்றுசொல்லி அவளைத்தேற் றியபின், மூவரும் அங்கே இலையடர்ந்த ஒருபெருமரத்தைக் கண்டு அதனடியில் வந்து சேர்ந்தார்கள்.

அந்த மரத்தின்மேல் கூடுகட்டிக்கொண்டு தன் குஞ்சுக ளோடும் பெண்பக்ஷியோடும் வசித்துக்கொண்டிருந்த ஓர் ஆண்புறு தன் மனைவியைநோக்கி "ஓ! பெண்மணியே, நாமி ருக்கும் இம்மரத்தினடியில் சிலர் வந்து தங்கியிருக்கிறார்கள். நம்மிடத்துக்கு வந்த விருந்தினர்களை ஓம்புதல் நம்கடமை யாதலால் அவர்களை நம்மாலியன்ற அளவு உபசரிப்போம். நாம் தேடிப்பெறவேண்டியவர்கள் தாமே வந்தார்களென்றால், அது நமது பாக்கியவிசேஷமன்றோ. தமக்கு விருந்தினர்கள் வந்துகொண்டே யிருக்கவேண்டுமென்று இன்றைக்கும் நாளை க்கும் இல்லறத்தோர் தம்தாய் தந்தையர்களின் திதிகளில் பிரார்த்திக்கிறார்களே. ஆகையால் இப்பொழுது உலர்ந்த சுள் ளிகளை நம்மூக்கினால் கொத்திக்கொணர்ந்து அவர்கள் முன் போடுவோமானால் அவற்றால் அவர்கள் இரவில் குளிர்காய் வார்கள்" என்றுசொல்ல, இரண்டும் சுள்ளிகளைக் கொண்டு வந்து குவித்தன. அவர்கள் தீமூட்டிக் குளிர்காயும்பொழுது ஆண்புறு பின்னும் தன் மனைவியைநோக்கி "ஓ! என் கருத்து க்கினையந்த கண்ணாட்டியே, நம்வீட்டுக்கு வந்த விருந்தினர்கள்

பட்டினியாக இருக்கலாமோ, அவர்களைப் புசிப்பித்தலன்றோ இல்லறத்திலுள்ள நம்முடைய முதற்கடமை. எத்தொழிலுள்ளோனும் அத்தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் கடமையைத் தன் உயிரைக்கொடுத்தாயினும் நிறைவேற்றுவதன்றோ தருமமென்பது. இப்பொழுது அவர்களுக்குப் புசிக்கக் கொடுக்க நம்மிடத்து ஒன்றுமில்லையாயினும் எனக்கு ஒன்று தோற்றுகின்றது. அவர்களுடைய எதிரில் கொழுந்து விட்டெரிகிற தீயில் நான் விழுந்துவிடுவேனானால் அவர்களுக்கு வேண்டிய ஆகாரமாவேன். அப்பொழுது இல்லறத்துக்குரிய கடமையைச் செலுத்தியவனாவதன்றி இச்சரீரம் எடுத்ததற்குப்பெற வேண்டிய பயனையும் அடைந்தவனாவேன்'' என்றுசொல்லிக் கொண்டு எரிகிறதீயில் விழுந்துவிட்டது. இதைப்பார்த்திருந்த பெண்புறு ''கணவன்கருத்துக்கு ஒத்துநடப்பவளே கற்புடைப்பெண்டிர். கணவன், அவர்களுக்கு ஆகாரமாகத்தீயில் விழுந்தார். அந்த ஆகாரம் அவர்கள் மூவர்க்கும் போதுமானதன்று. நானும் அவ்வாறே அவர்களுக்கு ஆகாரமானால் என் கணவன் கருத்து ஒருவாறு நிறைவேறலாம். அவ்விதம் நிறைவேற்றுவதைக்காட்டிலும் நான் செய்யக்கூடிய மேலான தருமம் யாது உளது'' என்று தானும் தீயில் விழுந்துவிட்டது. இவ்விருவர் காரியத்தையும் நோக்கி நின்ற குஞ்சுகள் ''இல்லறவாழ்க்கைக்குரிய தருமத்தை நம்முடைய தாய்தந்தையர்கள் வழுவாது நடத்தினார்கள். அத்தருமம் அரைகுறையாக நில்லாமல் அதனை முற்றுப்பெறச் செய்வதுதான் அவர்கள் பெற்ற குழந்தைகளின் கடமை. அவர்களாற்பெற்ற சரீரத்தை அவர்களுடைய தரும வழியில் உபயோகப்படும்படி செய்வதிலும் மேலானபாக்கியம் அச்சரீரத்துக்கு உண்டோ? நாமும் ஆகாரமானாலன்றி நம் தாய்தந்தையர்களின் எண்ணம் முற்றுப்பெறாது'' என்று அவையும் தீயில் விழுந்துவிட்டன.

இரவுகழிந்தபின்பு அருணோதயமானவுடன், ஸத்தியப்பிரியனும், ஹிதோபதேசியும், ராஜகன்னிகையும் காட்டைக் கடந்து ஊர் வந்து சேர்ந்தார்கள். இராஜகன்னிகை தன் தகப்பனிடம் சென்று, முன் கானகத்தில் எண்ணியபடியே தான் வரித்த கணவன்போல் பிரதிமையொன்று செய்து அற்கு வேண்டிய உபசாரங்களை செய்துகொண்டிருந்து கடைசியில் நற்கதியையடைந்தாள். ஸத்தியப்பிரியனும் ஹிதோபதேசியும் தனித்துப் பேசுவாராயினர்:—

ஹிதோபதேசி ஸத்தியப்பிரியனைநோக்கி, "ஓ! ராஜாவே, இப்பொழுது நீர் உம்முடைய சந்தேகம் தெளிந்தீரோ? நற்கதிக்கு இல்லறம் துறவறம் இரண்டும் வழிகள் தாம் என்பதைக் கண்டுகொண்டீரோ? ஒவ்வொன்றுக்கும் உரியதருமம் இன்னதென்று உமக்கு இப்பொழுது நன்குவிளங்கியிருக்குமே. துறவறவாழ்க்கையை விரும்புவோர், காட்டுக்குள் மறைந்து சென்ற சந்நியாசியை அநுசரிக்கக்கடவர்: இவர், செந்தாமரைபாளே உருவெடுத்து வந்தாளென்ன ரூபலாவண்ணியமும் குணதிசயங்களுமுடைய ஒருபெண் தன்னை அடியாளாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்து நிற்கவும், உலகவின்பங்கள் யாவற்றையும் தரக்கூடிய திரண்டதிரவியம் தம்வசப்பட்டிருக்கவும், அதிகாரத்தையும் செல்வாக்கையும் கொடுப்பதாகிய பூமி யரசாட்சி தமக்குச் சுவாதீனமாக ஆக்கப்பட்டிருக்கவும், இவற்றைத் தினையளவும்மதியாமல், ஆத்மஞானமார்க்கத்திற்குப் பெரிய இடையூறுகளெனக் கருதி உதறித்தள்ளிச்சென்றார். இல்லறவாழ்வை விரும்புவோர், நமக்கு ஆகாரமாகத் தீயில்விழுந்த புறாக்களின் வியாபாரத்தைக் கைக்கொள்ளக்கடவர். இல்லறத்தோர்க்கு உரிய பொருள்கள்யாவும் அவருடைய தேகமுமே பிறர்க்கென்று இருப்பனவாம். பொன் மாதா பூமி யென்பவற்றின் சம்பந்

தம் ஒரு விதத்திலும் தனக்கு இல்லாமல் நீங்கப் பெற்றவன் துறவி. இல்லறத்தானே, இவற்றிலேயே எப்பொழுதும் உழன்றுகொண்டிருப்பவனாகக் காணப்படினும், இவற்றின்மேல் 'என்னுடைய' என்ற அபிமானமற்றவனாயும் தன்தேகத்தையே பிறர்க்காக உடையவனாகவும் இருப்பவன். ஆதலால், நற்கதிக்குத் துறவறவாழ்க்கையிலும் சிறிதும் தாழ்ந்ததன்று இல்லறவாழ்க்கை. கடவுளிடத்து மெய்யன்புடைய உமது இல்லறவாழ்க்கைநிலையை நன்றாக யான் அறிவேன். அஃது உமக்கு நற்கதிகாட்டுமென்பதில் ஐயமே இல்லை" என்று சொல்லியதோடு, அரசனுக்குச் சகலமங்களமும் உண்டாகும்படி ஆசீர்வதித்துத் தம்வழியே சென்றார்.

சுபமஸ்து.

க்ரிமினல் சாட்சி சம்மன் ...	100-க்கு	0	6	0
குற்றவாளி சம்மன் ...	100-க்கு	0	6	0
பிரஸ்பட்டு (நிறைவேற்றமனு) பாரம்	50-க்கு	0	7	0
ஜப்திக் கட்டளை பாரம்	100-க்கு	0	6	0
பிராது பிளெயிண்டுபாரம் ...	50-க்கு	0	7	0
வக்காலத்து நாமா ...	50-க்கு	0	7	0
சிவில் வாதிக்கு மறுவாயிதா நோட்டீசு	100-க்கு	0	6	0
க்ரிமினல் வாதிக்கு மறுவாயிதா நோட்டீசு	100-க்கு	0	6	0
டிக்கிரி நிறைவேற்ற ஆட்சேபனை செய்ய பிரதிவாதிக்கு நோட்டீசு	100-க்கு	0	6	0
ஏல இஸ்தியர் ...	50-க்கு	0	7	0
பஞ்சாயத்து பெஞ்சு மெம்பருக்கு நோட்டீஸ் ...	100-க்கு	0	6	0
வாக்குமூல பாரம் ...	50-க்கு	0	7	0
சிவில் குவார்டர்லி பாரம் ...	50-க்கு	0	7	0
முச்சிலிக்கா பாரம் ...	100-க்கு	0	6	0
நிறைவேற்றுமனு ரெஜிஸ்டர் ...	1-க்கு	0	6	0
ஷை நடவடிக்கையின் மீந்திர கணக்குபாரம் ...	50-க்கு	0	7	0
சாட்சி ஜாப்தா மனு ...	50-க்கு	0	7	0
படி மெமோ ...	50-க்கு	0	7	0
கிரிமினல் கேஸ் டாக்கெட்பாரம்	50-க்கு	0	7	0
சிவில் கேஸ் ஷை ...	50-க்கு	0	7	0
சிவில் டைரி புக் ...	1-க்கு	0	6	0
சிவில் டிக்கிரிபாரம் ...	50-க்கு	0	7	0
கி. மு. ரெகார்டுக்கு நகல்வாங்க மனு பாரம் ...	100-க்கு	0	6	0
இரசீது கைச்சாத்து 12-பக்கமுள்ளது	1-க்கு	0	0	6
ஒரேதடவை 100 மொத்தமாக வாங்கினால்		2	8	0
பைண்டு செய்த கைச்சாத்து		0	4	0

புதிய நாவல்கள்.

	ரூ.	அ.	பை.
மதிமுகி 2-பாகம்	0	8	0
பாதாளவாசி	0	4	0
மாயாவதி	0	4	0
அருளானந்தன்	0	10	0
வனமாலிகா	0	8	0
இராஜாமணி	0	8	0
பத்மநாபன்	0	8	0
பாஸ்கரன்	0	10	0
கிருஷ்ணதீட்சதர்	0	8	0
ஜயதேவன்	0	8	0
இரத்த விமானம்	0	14	0
பிரதாபசிங்	0	8	0
சத்யவிஜயன்	0	10	0
தாருகசாசுவம்	0	14	0
நளாகினி விஜயம்	0	14	0
நெப்போலியன் சரித்திரம்	0	2	0
நார்ஜிகான் சக்கிரவர்த்தினி	0	4	0
மோகனசுந்தரி	0	4	0
சுசீலா	0	10	0
ஹிந்துமதப்பிரசங்கம்	0	2	0
இல்லறமா? துறவறமா?	0	1	0
நடுவேனிற்கனவு	0	8	0
சிபிச்சக்கரவர்த்தி	0	1	0
பக்தசந்திரிகா	0	10	0
சோபகந்தன்	0	12	0
உஷாகல்யாணம்	0	1	0

மதுகரவேணிவிலாசம் புக்டிபோ.

வேப்பேரி—மதராஸ்.